பாரத மணி

தொடர் முத்து 87 வாரப் பத்திரிகை 25-8-4

THE BHARATA MANI, MADRAS.
EDITOR: K. S. VENKATARAMANI.

ஆகஸ்ட் 23உ ஆரம்பம்!

மகாத்மா காந்தி

(அவரது வாழ்க்கையின் சம்பவங்கள்)

முழு நீளமுள்ள தமிழ் சினிமாப் படம்

ஸ்ரீமதி D. K. பட்டம்மாள் — சூர்யகுமாரி

ராஜரத்தினம் — பாய் சுந்திரா பாய்

முதலியோரின் பின்னணி சங்கீதம்

சென்னை ராக்ஸியில்

தினசரி
3 - காக்ஷிகள்

★

மாலை 3-15,
6-15 & 9-30

மதுரை — சிட்டி சினிமா
கோயமுத்தூர் — லக்ஷிமி
காரைக்குடி — நடராஜா
திருநெல்வேலி — ராயல்

ஏககாலத்தில் ஆரம்பம்.

விவரங்களுக்கு

The Documentary Films Ltd.,
77, Lloyds Road, Royapettah – Madras.

Phone: 86155. Grams: 'MONTAGE'.

பாரதமணி

13876

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6

மாலை 4	ஞாயிறு 25-8-40 விக்ரம௵ ஆவணி௴ 10௳	முத்து 14

பொருள் அடக்கம்

விஷயம் பக்கம்

உலக வர்த்தமானம் 370
தமிழ் நாட்டுச் செய்திகள் 372
பச்சையப்பன் கல்லூரி 373
உதிர்ந்த மணிகள் 374
இந்து தியலாஜிகல் ஸ்கூல் 375
உபயோகமான கைத்தொழில் 377
ப்ரச்நோத்ர ரத்ந மாலிகை ... ... வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி 380
உபநயனம் ... ... எஸ். வைத்தீசுவர ஐயர் 381
சுகாதார நலன்கள் ... ராவ்பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி 382
ஒரு கிரகணம் ... ... பெ. நா. அப்புஸ்வாமி 385
சிறுவர் பகுதி ... ... பார்வதி சுப்ரமண்யம் 391
குழந்தையின் கதி ... ... கே. எஸ். ராமாநுஜம் 392

“ பாரத மணி ” யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

உலக வர்த்தமானம்

இவ் வாரம் ஐரோப்பிய யுத்தம் சற்று மும்முரமாக நடந்துவருகிறது. நாற்பது விமானம், ஐம்பது விமானம் என்பதெல்லாம் போய் "ஆயிரம் விமானங்கள் பிரிட்டன்மீது பாய்ந்தன" என்று செய்திகள் கூறுகின்றன. சென்ற 16-ம் தேதி முதல் கோரமான விமான யுத்தம் பிரிட்டனின் தென் கிழக்குக் கரையில் நடப்பதாகத் தெரிகிறது. லண்டன் நகரும் அதற்கருகாமையிலுள்ள பிரதேசங்களும் குண்டு வீச்சால் மிக்க சேதமடைந்தன என்று தெரிகிறது. ஆனால் பிரிட்டிஷ் விமானப் படை தீவிரமாக ஜெர்மன் விமானங்களை எதிர்த்து வீழ்த்தின என்று செய்தி கூறுகிறது. இந்த பெரிய விமானப்படை எடுப்பில் ஜெர்மனி மிகுந்த நஷ்டமடைந்ததாகக் கூறப்படுகிறது.

ஸோமாலிலாந்தில் இத்தாலியின் முன்னேற்றம் வெகு தீவிரமாக நடந்தேறி வருகிறது. பிரிட்டிஷ் ராஜிய முறையில் விடுத்த அறிக்கை, பிரிட்டிஷ் துருப்புகள் வெற்றிகரமாக அதிக நஷ்டமின்றி ஸோமாலிலாந்திலிருந்து வெளியேறி ஏடனுக்கு வந்து சேர்ந்தன என்று கூறுகின்றது. ஸோமாலி லாந்தில் இத்தாலிக்குக் கிடைத்த வெற்றி பிரிட்டனின் நிலைமையைப் பாதிக்காது என்று ராஜீய முறையில் விடுத்த அறிக்கை கூறுகிறது.

பால்கன் நாடுகளிலுள்ள எல்லைப்பிரச்னை கொஞ்சம் கொஞ்சமாக வலுத்துக் கொண்டே இருக்கிறது. பால்கன் நாட்டுச் சிக்கலைப் பற்றி "மாஞ்சஸ்டர் கார்டியன்" பின் வருமாறு தலையங்கம் எழுதுகிறது: பல்கேரியர்கள் தங்கள் கோரிக்கைகளை மிதமாக்கிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வருவதிலிருந்து, பால்கன் நாடுகளுக்கு எல்லை சம்மந்தமாய் அமைதியான, சண்டை சச்சரவற்ற முறையில் நியாயமான ஒரு முடிவு ஏற்படலாம் என்று தோன்றுகிறது. தென் டோப்ருஜா மாகாணத்தில் உள்ள பல்கேரியச் சிறுபான்மை மக்கள் சேர்ந்தாற்போல் அங்கே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் ருமேனியாவுக்கும் ஹங்கேரிக்கும் இடையே இன்னும் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு ருமேனியப் பத்திரிகை தியாகம் செய்யவேண்டியதின் அவசியத்தைக் குறிப்பிட்டு எழுதுகிறது. ஆனால் ஹங்கேரியர்கள் தியாகத்தோடு திருப்தியடைவார்களா, அல்லது ருமேனியர்தான் தியாகத்திற்குத் தயாரா என்ற விஷயம் வேறே. டிரான்ஸில்வேனியா பூராவையும் பெற்றால் ஒழிய ஹங்கேரி பூரண திருப்தி அடையாது என்பது உறுதி. ஆனால் ருமேனியர்களோ, அம் மாகாணம்தான் தங்கள் நாகரிகம் வளர்ந்த பண்ணை என்று கருதுகிறார்கள். இவ்விரண்டுக்கும் ஓர் சமரஸமாய், ருமேனியா ஹங்கேரிக்கு ஒரு சிறு பிரதேசத்தை விட்டுக் கொடுக்கட்டும், இரு தேசங்களும் தங்கள் சிறுபான்மைப் பிரஜைகளைப் பரிவர்த்தனை செய்து கொள்ளட்டும், என்று ஜெர்மனி ஆலோசனை கூறுகிறதாம். நெருக்கப்பட்டால் ஒருவேளை ருமேனியா டிரான்ஸில்வேனியாவின் மேற்கோரமாய்க் கொஞ்சம் பூமியை விட்டுக் கொடுக்கலாம். ஆனால் ஜனத்தொகைப் பரிவர்த்தனை விஷயம் வந்தால் ஒன்றைக் குறிப்பிடவேண்டுவது அவசியம். ருமேனியாவின் நடுமத்தியில் 5 லட்சம் ஜனத்தொகை கொண்ட மாக்யார் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருகிறார்கள். பன்னூறு

ஆண்டுகளாய் வேர்விட்டு வாழ்ந்துவந்த இம் மக்கள் ஹிட்லருடைய நவாப்தர்பார் வழிப்படி நடக்கச் சித்தமாயிருக்க மாட்டார்கள் என்பது உறுதி."

அமெரிக்கப் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கானடா பிரதம மந்திரி மாக்கென்ஸி கிங்குடன் கலந்துபேசி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். குடகோளார்த்தத்திலுள்ள நாடுகளை வெளி தேசத்தார்களின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்ற அமெரிக்காவும் கானடாவும் ஒத்துழைக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

வைஸ்ராய் விடுத்த அறிக்கையை விளக்குவதுபோல் இந்தியா மந்திரி அமெரி இந்திய அரசியல் நிலைமைப் பற்றிக் காமன்ஸில் பேசினர். "இந்தியா டொமினியன் பதவியை அடையப் போவது நிச்சயந்தான்" என்று கூறினர். ஆனல் தற்சமயம் பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸின் வசம் கவர்ன்மெண்டை ஒப்புவித்து நடத்தசாத்தியப்படாது என்று கூறினர். காங்கிரஸ் ஒரு சர்க்காருடைய பிரதிநிதி ஸ்தாபனமே தவிர இந்தியா முழுமைக்கும் பிரதிநிதியல்ல என்று கூறினர். இந்தியாவில் உள்ள பல வகுப்பினர்களும் ஒன்று கூடி ஒற்றமை யடைந்தால் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து கொடுக்க ஆட்சேபம் இல்லை என்று வெளியிட்டார்.

அமெரியின் பேச்சு இந்தியாவின் "பழுத்த மிதவாதிகளை" க்கூடத்திருப்தியளித்ததாகத் தெரியவில்லை. காங்கிரஸ் தலைவர் வைஸ்ராய் அழைப்புக்கு மறுத்து பதிலனுப்பிவிட்டார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் கூடிற்று. காந்திஜியும் ஆஜராகி இருந்தார். முக்கியமாக வைஸ்ராய் அறிக்கைக்குப் பதிலனுப்புவதற்காகக் கூடி இருக்கிறது, என்று தெரிகிறது. இக் கூட்டம் மூன்று நான்கு நாட்களுக்குமேல் கூட நடக்கலாம் என்று தெரிகிறது. காந்திஜி தினமும் காரியக் கமிட்டிக் கூட்டத்திற்கு வருவாராம்.

காங்கிரஸ், பிரிட்டிஷ் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்த இன்னும் தயாராயிருப்பதாகவும் அவசரப்பட்டுத் தீவிரமான இயக்கம் ஒன்றும் ஆரம்பிக்கப் போவதில்லை என்றும் நிருபர்கள் கூறுகிறார்கள். ராஷ்டிரபதி ஒரு நிருபருக்குப் பதிலளிக்கும் போது "ஜனங்கள் தயாராக இருக்கவேண்டும்" என்று கூறினராம்.

முஸ்லிம் லீக்தலைவர் ஜின்னு பம்பாயில் வைஸ்ராயைப் பேட்டி கண்டார். அரசியல் விஷயங்களைப்பற்றிப் பேசும் போது இந்தியாவுக்கு ஜனநாயகம் தகுந்ததல்ல என்று கூறினராம். இப்பொழுது யுத்தம் நடந்து வருவதால் பாகிஸ்தான் திட்டத்தை ஜின்னு ஒத்திப் போட ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பீஹார் மாகாணத்திலுள்ள லீகர்கள் காங்கிரஸ் தலைவருடனே அல்லது காங்கிரஸ் பிரதிநிதிகளுடனே முஸ்லிம் லீக் பேச்சு வார்த்தை நடத்த ஏழு முஸ்லிம்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், என்று செய்தி கூறுகிறது.

ஐக்கிய மாகாண சர்க்கார் "நேஷனல் ஹெரால்ட்" பத்திரிகாசிரியருக்கு "இனி செய்தித் தலைப்புகளைச் சர்க்கார் தணிக்கைக்கு அனுப்பவும்" என்று உத்தரவிட்டார்கள். அப்பத்திரிகையின் மேனேஜிங் டைரெக்டர் மோஹன் லால் ஸாக்ஸனு "நாங்கள் உத்தரவுக்குப் பணியோம்" என்று கூறித் தலைப்பில்லாமலே செய்திகளைப் பிரசுரம்செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. கிருஷ்ண தத்த பலிவால் கைதியானர் என்று செய்தி கூறுகின்றது. இது சம்பந்தமாக ஜவஹர்லால் நேரு விடுத்த அறிக்கையில் "நமது தலைவரைக் கைது செய்திருப்பது நமக்கொரு சவால். நமக்கு சோதனைக் காலம் நெருங்கி வருகிறது என்பதற்கு இது முன்னெச்சரிக்கையாகும்" என்று கூறினர்.

"பலவித இக்கட்டுகளையும் எதிர்த்து வெற்றி பெற்ற ஐக்கிய மாகாண சகோதர சகோதரிகளே, தயாரா யிருங்கள்; தயக்கம், தடுமாற்றம் இன்றி தலைநிமிர்ந்து நில்லுங்கள்" என்று எச்சரிக்கை செய்தார்.

தமிழ் நாட்டுச் செய்திகள்

நெல்லை ஸி. எம். ஹைஸ்கூலின் எழுபத்தைந்தாவது வருஷக் கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும் சென்ற 10 உ சனிக்கிழமை மாலை ஜில்லாக் கலெக்டர் ஸ்ரீ. எஸ். டி. கிருஷ்ணராவ். ஐ. ஸி. எஸ். தலைமையில் நடந்தது. ஸ்ரீமதி, கிருஷ்ணராவ் பரிசுகளை வழங்கினார். தலைமை ஆசிரியர், ஸ்ரீ. சாமுவேல் முத்தையா ஆண்டறிக்கையைப் படித்து அப் பள்ளிக்கூடத்திற்குப் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பழைய மாணவர்கள் தாராளமாக உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தலைவர் முடிவுரையில் அப் பள்ளிக்கூடத்தைத் திறமையாக நடத்தும் தலைமை உபாத்தியாயரையும் அவர் சகாக்களையும் பாராட்டி, பள்ளிக்கூடம் இன்னும் விமரிசையாக நடத்தச் சில யோசனைகள் கூறினார். வந்தனோபசாரத்துடன் விழா முடிந்தது.

* * *

கோவை கலைஞான சங்கத்தின் ஆதரவில் சென்ற 14உ ஸ்ரீ.வி.சி. வெள்ளிங்கிரி கௌண்டர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கேப்டன் இ. எஸ். கோபாலன் "சுகாதாரமும் கிராம வாழ்க்கையும்" என்பதைப் பற்றிப் பேசினார். சாதாரண சுகாதார விதிகளைக் கவனிக்காமல் இருப்பதால் பல வியாதிகள் பரவுகின்றன, என்று கூறினார். ஸ்ரீ. எம். எஸ். சுந்தரேஸ்வரய்யர் பேசுகையில், கிராமங்களிலேயே உபாத்தியாயர்கள் வசிப்பதோடு, கிராமத்தாருடன் நெருங்கிப் பழக வேண்டும் என்று கூறினார். வார்தாக் கல்வித் திட்டத்தின் விசேஷ குணங்களைப் பற்றியும், வட இந்தியாவில் வார்தாக் கல்வி முறைப்படி பாடசாலைகள் நடைபெற்று வருவதைப் பற்றியும் எடுத்துக் கூறினார். ஸ்ரீ. வி. ஏ .கிருஷ்ணமூர்த்தி வந்தனம் கூறினார்.

* * *

சென்ற 11-ம் தேதி அண்ணாமலை நகரில் மாணவர் கூட்டத்தில் "வாலிபர்கள் முன்னுள்ள வேலை" என்னும் விஷயம் பற்றி ராவ்பகதூர் எம். ஆர். ராமஸ்வாமி சிவன் பேசினார். உப அத்யக்ஷகர் ஸர். கே. வி. ரெட்டி தலைமை வகித்தார். படித்தவர்கள் விவசாயத்தில் கவனம் செலுத்தவேண்டியதன் அவசியத்தை ஸ்ரீ. ராமஸ்வாமி சிவன் வற்புறுத்தினார். பஞ்சாப் மாகாணத்தில் லையால்பூர் ஜில்லாவில் அமுல் நடத்தப்படும் விவசாயக் காலனித் திட்டத்தை விளக்கும் முறையில், சில படங்களை மாஜிக் லாண்டர்ன் மூலம் காட்டி, சென்னை மாகாணமும், அம்மாதிரி திட்டம் ஒன்றை அமுல் நடத்த வேண்டுமென்றுங் கூறினார். தலைவர் முடிவுரையில், விவசாயம் கௌரவம் வாய்ந்த தென்றும், விவசாயிகளின் நிலைமை முன்னேறச் சகலரும் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

* * *

ஸ்ரீ. அரவிந்தரின் 69-வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று புதுச்சேரியில் அவருடைய ஆசிரமத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. பகவான் அரவிந்தயோகி இன்று அன்னையுடன் ஆசிரம வாசிகள் 200 பேருக்கும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்த சிஷ்யர்கள், போற்றுகிறவர்கள் 300 பேருக்கும் தரிசனமளித்தார்.

* * *

இந்திய அரசியல் திட்டத்தின் 93வது பிரிவின்படி தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு ஸ்தல ஸ்தாபனங்கள் சம்பந்தமாக, சென்னை கவர்னர் ஒரு சட்டம் இயற்றி இருக்கிறார். அதன்படிக்கு "யுத்தத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சந்தர்ப்பங்களை யுத்தேசித்து, பணச் செலவு, கட்சி யுணர்ச்சிகள், வகுப்பு உணர்ச்சிகள், முதலியவற்றைத்" தவிர்க்க பல ஸ்தாபனங்களுக்கு 1940 நவம்பர் மாதம் நடப்பதாக இருந்த தேர்தல் ஒத்திப் போடப்பட்டு, மெம்பர்களின் பதவி காலம், 1941 நவம்பர் 1உ வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

பச்சையப்பன் கல்லூரி

சென்னை நகருக்கு தன் ஆப்த நண்பர்களில் ஒருவனை விட்டுப் பிரியும்படியான சந்தர்ப்பம் நேர்ந்து விட்டது. 1842-ம் வருஷம் முதல் சென்னை நகரிலேயே இருந்து சென்னை நகரை அலங்கரித்த பச்சையப்பன் கல்லூரி சேத்துப்பட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. பச்சையப்பன் கல்லூரி இன்று மற்ற சகோதரக் கல்லூரிகளைப் பார்த்து, "என்னை துரதிர்ஷ்டசாலி என்று ஏளனம் செய்தீர்களே. இப்பொழுது என்னைப் பாருங்கள்" என்று தோளைத் தட்டிக்கொண்டு சேத்துப்பட்டில் நிற்கிறது. அது நிற்கும் அழகைப் பார்த்துவிட்டுக் கலைத்தாய் உள்ளப் பூரிப்புடன் அதன் எதிரில் நிற்கிறாள். அவளுக்கெதிரில் இரண்டு பாதிரிமார்கள் வியப்புடன், விச்வரூபத்துடன் நிற்கும் பச்சையப்பன் கல்லூரியைப் பார்த்துப் புன்னகை கொள்கிறார்கள். ஸைட் ஹேட்டுடன் கூடிய ஸ்ரீமான் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர் ஆனந்தத்தால் கைகொட்டுகிறார். இவர்கள் மத்தியில், தான் ஜார்ஜ் டவுனை விட்டுப்பிரிந்து வந்து விட்டோமே என்ற மனக்கவலை கொஞ்சமும் இல்லாமல், கம்பீரமாக நிற்கிறது பச்சையப்பன் கல்லூரி.

* * *

பச்சையப்பன் கல்லூரிக்கு இந்த யோகம் திடீரென்று வந்து விட்டதா? இல்லவே இல்லை. 1915-ல் சேத்துப்பட்டில் இக் கல்வி நிலையத்தின் மாணவர் விடுதிக்கு கடைக்கால் ஊன்றும்போதே, அங்கு விடுதிக் கருகில், விஸ்தாரமான பிரதேசத்தில் கல்லூரியையும் கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கம் பச்சையப்பன் டிரஸ்டிகளுக்கு வேரூன்றி விட்டது. அது முதல் கல்லூரிக் கட்டிடத்தைச் சேத்துப்பட்டில் கட்டிவைக்க வேண்டும் என்கிற அவா நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்தது. மொட்டு மலர்ந்து. காயாகிப் பழுத்து இன்று தன் தேன் போன்ற ரஸத்தால் பொது ஜனங்களை இனிப்பிக்கிறது.

1915-ல் அவா பிறந்தது. ஆனால் 1934 வரையில் கல்லூரி நிர்வாகஸ்தர்கள் பிரயத்தனங்கள் பலனடையவில்லை. அதே வருஷத்தில், ஸ்ரீ. கே. வேங்கடஸ்வாமி நாயுடு, ஸ்ரீ. வி. திருவேங்கடஸ்வாமி பிள்ளை, ஆகிய இவ்விருவர்களும், டிரஸ்டு போர்டின் கூட்டுறவின் பேரில் நடத்திய லாட்டரியின் வெற்றியே பச்சையப்பன் புதுக் கட்டிடத் திட்டத்தின் முதல் வெற்றியாகும்.

கல்லூரி நிர்வாகஸ்தர்களுக்கு அதன் பிறகு வெற்றிமேல் வெற்றி வர ஆரம்பித்தது. 1935-38ல் பிரின்ஸிபாலாயிருந்த ஸ்ரீமான் பி.என். ஸ்ரீநிவாசாச்சாரியார் இத்திட்டம் வெற்றிகரமாக முடிய எடுத்துக்கொண்ட சிரமங்கள் கொஞ்சமல்ல! டிரஸ்ட் போர்டு பிரெஸிடெண்ட் ஸ்ரீ லக்ஷ்மண ஸ்வாமி முதலியாரும், குமாரராஜா முத்தைய செட்டியாரும் இது சம்பந்தமாகப் பல துறைகளில் மிக்க பாடுபட்டதை எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை. கல்லூரி நிர்வாகஸ்தர்களுடைய இவ்வளவு பிரயத்தனங்களை ஒரு தட்டிலும், 1937ல் காங்கிரஸ் சர்க்காரின் மனப்பூர்வமான ஆதரவை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்கவேண்டும். இரண்டும் சற்றேறக்குறையச் சமமாகவே இருக்கும். புதுக்கட்டிடத்திற்குச் சர்க்கார் ரூ. 3½ லக்ஷம் ஸாங்ஷன் செய்தது, அப்பொழுது பிரதமமந்திரியாயிருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, இத்தேசியக் கல்வி நிலையம் விருத்தியடைய வேண்டும் என்று கொண்டிருக்கும் அவாவையே காட்டுகிறது. எனவே இன்று வெற்றிக் கொடி பறக்க சேத்துப்பட்டில் பச்சையப்பன் கல்லூரி நிற்பதற்குக் காரணம் இவ்வளவு பேர்களுடைய பிரயத்னமும் பொது ஜனங்களுடைய ஆதரவும் தான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

உதிர்ந்த மணிகள்

பிரிட்டிஷ் துப்பாக்கியின் உதவியோ, ஈட்டி முனையின் உதவியோ இல்லாமல் இந்தியர்கள் உதவியைக் கொண்டே, உள் நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடியும் படி, நமது போலீஸ் ஏற்பாடுகளைச் சீர் திருத்துவதிலும், தொண்டர்படையை வளர்ப்பதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஸ்வராஜ்யம் கிடைப்பதற்கு முன் அதற்குப் பிறகு அதைக் காப்பாற்று வதற்கும் குறைந்த பக்ஷம் நாம் செய்யக் கூடியது இதுதான்.

—எஸ். சத்யமூர்த்தி

* * *

ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலுமுள்ள ஜனங்கள் விடுதலை அடையாதவரையில், ஐரோப்பியர் சுரண்டலுக்கு முடிவு ஏற் படாதவரையில், ஏகாதிபத்திய வல்லரசு களின் ஆளுகைக்கும் முடிவு ஏற்படாது. ஆகையால், சக்திவாய்ந்த ஆக்கிரமிக்கும் நாடுகளின் கொடுமைகளிலிருந்து சிறிய, பலஹீனமான தேசங்கள் தப்பமுடியாது.

—ஸர் நார்மன் ஏன்ஜல்

கான் அப்துல் கபார்கானைப் பார்க்கவே எனக்குப் பயங்கரமான காட்சியாக இருக் கிறது. கம்பீரத்தில் சகலரையும் அவர் தோற்கடித்துவிடுகிறார். நமது அபிமானத் துக்குப் பாத்திரமான மகாத்மாகூட, ஜவ ஹர்லால்கூட, சர்தார்கூட கானின் தோற் றத்தில் பாதிக்கூட வருவதில்லை. சரித் திர பிரசித்திபெற்ற வீரர்களின் நினைவு கள்—வெலிங்டன், ஜாபிரேஸ், பாச் முத லிய அசகாயசூரர்களின் நினைவுகள்— கானைப் பார்க்கும்போது மீண்டும் மனக் கண்முன் வந்து நிற்கின்றன. இந்தியா சுயராஜ்யம் அடைந்ததும், அதன் சேனாதிபதியாக இருக்க அவர்தான் தகுந்த மனிதர்

—டி. எப். கரகா

* * *

ஒவ்வொரு நிமிஷமும் நமது சிறுமையையும் இந்தியாவில் நமது பேச்சுக்கு மதிப்பில்லாமல் இருப்பதை யும் கண்டு நான் துயரப்படுகிறேன். நாக ரிகத்தைத் தொலைக்க வந்திருக்கும் ராக்ஷ ஸத்தனத்தைத் தடுக்க நமக்குப் போது மான சக்தியில்லையே.

—ரவீந்திரநாத் தாகூர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

சுமார் நூறுவருஷமாகக் கல்வி அபி விருத்தியில் ஈடு பட்டு, தர்ம கர்த்தா பச்சையப்ப முதலியாரின் நோக்கத்தைப் பூர்த்தி செய்த இக்கல்வி நிலையத்திற்கு இப்பொழுது இந்த அதிர்ஷ்டம் கிடைத் தது அதிசயமல்ல. இன்னும் மேலும் மேலும் விருத்தியடைய வேண்டும் என் பதுதான் பொதுமக்களுடைய கோரிக்கை. பச்சையப்ப முதலியார் இந்தியர்களுக்கு ஒரு சிறந்ததர்ம வழி காண்பித்து விட்டு மறைந்தார். தன்னலங் கருதாது சமூகத் துக்கு உழைக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். அதுவேதான் அவ ருடைய வேதாந்தமும். இந்தத் தர்ம சிந் தனை ஒவ்வொரு இந்தியரிடமும்வேரூன்றி இருக்கிறது என்று சொல்வது மிகை யாகாது. எனவே இக்கல்வி நிலையம் இன் னும் மேலும் மேலும் பற்பல துறைகளி லிருந்து ஆதரவு பெற்று விருத்தியடையும் என்பதில் சந்தேக மில்லை. பிரின்ஸிபால் டி. எஸ். சர்மா "காலேஜ் விருத்தியடை யும் பக்ஷத்தில், தமிழ் தெலுங்கு ஸமஸ்க் ருதம் முதலிய பாஷைகளுக் கென்றே ஒரு தனி இலகா கட்டிடத்தின் ஒரு முழுப் பாகத்தையும் உபயோகித்துக் கொள்ளும் என்று நம்புகிறேன்" என்று கூறினர். இவர் நம்பிக்கை செயல் ரூபமாக மாற வெகு நாட்கள் ஆகாது என்பதை எல் லோரும் அறிவார்கள்.

இந்து தியலாஜிகல் ஸ்கூல்

சென்னை இந்து தியலாஜிகல் ஹைஸ்கூலின் தங்க விழா இந்த மாதம் இரண்டாந்தேதி முதல் ஒன்பது நாள்வரை மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்து கொள்ளாதவர்கள் ஒருவரும் இல்லை. நேர்முகமாகவோ மறைவிலிருந்தோ எல்லோரும் விழாவில் கலந்து கொண்டார்கள்—ஹிந்தி எதிர்ப்பாளர்கள் தவிர.

சென்னை வாசிகள், இந்தப் பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தியைக் கண்டு பெருமைப் படக்கூடியவர்களாகிறார்கள். ஏனெனில் மற்றப் பள்ளிக்கூடத்தில் காணப்படாத சில அபூர்வ குணங்கள் அதனிடத்தில் இருக்கின்றன. முதலாவதாக இப்பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்குக் கற்பித்துவரும் திட்டங்களும், கட்டுப்பாடுகளும், பார்ப்போருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றன. மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் இடையில் உள்ள அன்யோன்ய பாவத்தைச் சொல்லி முடியாது. கூட்டமாக ரயில் பிரயாணம் போகும் போது பிள்ளைகளுக்கு உபாத்தியாயர்கள் செய்யும் சிசுருஷைகளைப் பார்க்க வேண்டும்! கல்வி போதனையும் வெகு விமரிசையாக நடக்கிறது. ஹிந்து மதத்தின் பெருமையையும் ஹிந்து மதத்தையும் பிள்ளைகளுக்கு எந்த நேரத்திலும், ஊட்டும் சக்தியுள்ளது அப்பள்ளிக்கூடம். மதத்தினிடத்தில் பற்றும், தேச பக்தியும் அங்கு படிக்கும் பிள்ளைகளுக்கு ஊடுருவி நிற்கின்றன. அப்பள்ளிக்கூடத்திலிருக்கும் சங்கங்களின் பெயர்களைத் தெரிந்துகொண்டாலே இது நன்கு விளங்கும்—

பாரத மாதா மார்ட்; அபிமன்யு ட்ரூப்; சிவாஜி கோர்; குசேலர் பண்டு.” இவ்வித சிறந்த அம்சங்கள் கொண்ட இந்த ‘மாடல்’ பள்ளிக்கூடத்தைக் கண்டு சென்னை வாசிகள் பெருமையடைய மாட்டார்களா? சென்னை மாகாணம்தான் கௌரவம் பெறாதா?

இப்பள்ளிக்கூடத்தை ஐம்பது வருஷங்களுக்கு முன்பு ஸ்தாபித்தவர் ஸ்ரீ. சிவசங்கர பாண்டியாஜி. இவர் ஹிந்து மதத்தில் மிகப்பற்றுள்ளவர். திறமை வாய்ந்த உபாத்தியாயர். அக்காலத்தில் ஹிந்து மதத்தை கிறிஸ்தவர்கள் மிகக் கேவலமாக எண்ணித் தூஷித்தார்கள். தூஷணையைப் பொறுக்காதவராய் சிவசங்கர பாண்டியாஜி ஹிந்து தியாலாஜிகல் ஸ்கூலை 1889-ம் வருஷம் ஜனவரி மாதம் 14-ம் தேதி ஸ்தாபித்தார். பொதுமக்கள் ஆதரவைப் பெற்று அது முதல் ஸ்கூல் விருத்தியாய்க் கொண்டே வருகிறது. குருகுல தர்மாச்சாரியர் ஸ்ரீமான் கே. ரங்கஸ்வாமி அய்யங்கார் அப்பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயராகவந்த பிறகு பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்தின் வேகம் அதிகரித்தது. பற்பல சீர்திருத்தங்களைச் செய்தார். சுயநலம் கருதாது ஏழைக்குழந்தைகளுக்குப் பொருளுதவியளித்துப் படிக்க வைக்கிறார். சென்னை மாகாணத்தியுள்ள முதல்தரப் பள்ளிக்கூடங்களில் ஒன்றாக, இன்று இந்து தியலாஜிகல் விளங்கும்படி செய்தவர் இவரே. இவரைத் தலைமை உபாத்தியாயராகக் கொண்ட இப்பள்ளிக்கூடம் பொது ஜனங்களின் ஆதரவைக் கொண்டு மேலும் மேலும் விருத்தியடையும் என்று நம்புகிறோம்.

அறிக்கை: பாரதமணியின் அமைப்பைப்பற்றியும் அதில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளைப்பற்றியும் வாசகர்களிடமிருந்து அனுப்பப்படும் அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் வரவேற்கிறோம். வாசகர்கள் அவரவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் அரசியல், பொருளாதார சமூக சீர்திருத்த விஷயங்களைப் பற்றிக் கூறும் யோசனைகளை ஆசிரியருக்கு எழுதும் கடித மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம்.

—ஆசிரியர்

பரசுராம சித்த ஔஷதாச்ரமம் திருவண்ணமலை (N. A. Dt.)

மதராஸ் பிராஞ்சு: 59-A, லாய்ட்ஸ் ரோட், ராயப்பேட்டை.

நீடித்த வியாதிகளே, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும் நீரழிவு ரோகத்திற்கும் சர்ம தோஷங்களுக்கும் (குஷ்ட முள்பட) ஔஷதங்கள் இருக்கின்றன.

முப்பு குரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஔஷத சாலையின் பிரதான வைத்தியர் பிரதி மாதமும் மதருஸில் 1உ முதல் 10உ வரையில் இருப்பார்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்: ஸாரதா ஸ்டோர்ஸ், கரைக்குடி.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்: அப்பா அண்டு கம்பெனி, மதராஸ்.

மீனாட்க்ஷி ஸ்டோர்ஸ், தேவக்கோட்டை. T. N. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.

T. N. சொக்கலிங்கம் பிள்ளை, அண்டு சன்ஸ், மதரை

"தினமணி" பத்திரிகை ஆசிரியர்

ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை 6-5-40ல் எழுதுகிறார்.

டாக்டர் எஸ். பரசுராம ஐயர் அவர்களின் யோதியைப்பற்றியும், அவர்களுடைய பிரமுகர்களாலும் டாக்டர்களாலும் கொடுக்கப்பட்ட பல நற்சாட்சிப் பத்திரங்களையும் பரிசிலனை செய்த பிறகு எனக்கும் அவர்களிடம் எனது ஆரோக்கியத்திற்காக மருந்து சாப்பிடலாமென்று தோன்றியது. நான் அவர்களிடம் ஒருவாரம் மருந்து சாப்பிட்டபின் எனக்கு ரொம்பவும் ஆச்சரியப்படத்தக்க குணம் ஏற்பட்டு ஆரோக்கியத்தையும் கொடுத்தது.

இதனுல் இதற்குமுன், இங்கிலீஷ் டாக்டரிடம் மருந்து வாங்கி சாப்பிட்டபோதினும் குணம் ஏற்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அநேகம் பேர்கள் தகுந்த நாட்டு வைத்தியர்கள் அகப்படாததால் வெளிநாட்டு மருந்துகளை உபயோகிக்கிறுர்கள்."

இதோ, தகுந்தவராயும், சாமர்த்தியம் வாய்ந்தவருமான டாக்டர் இருக்கிறுர் என்பதைத் தெரிவிக்கிறேன். நமது புராதன வைத்யமுறையை ஆராய்ச்சி செய்தவர்களில் ஒருவர் என்று நம்புகிறேன். அவருடைய மருந்துகள் அபூர்வ குணத்தைக் கொடுக்கக்கூடியவைகளாயிருக்கின்றன.

(ஒப்பம்.) டி. எஸ். சொக்கலிங்கம்.

வலங்கிமான் டி. மு. கோர்ட்டு

S. C. 396/40

S. ரெங்காச்சாரியார்
நுக்குமணி அம்மாள் } வாதிகள்

அய்யாகண்ணு கவுண்டர்—பிரதிவாதி

ஷை நெம்பர் பிரதிவாதிக்கு வாதிகள் வக்கீல் அறிவிக்கிறதாவது ஷை நெம்பரில் வாதிகளால் உம்முடைய பேரில் பிருமிசரி கோட்டுப்படி ரூபாய் 265-2-9 க்கும் பிந்திய வட்டி சிலவுக்கும் தாவா செய்யப்பட்டு சம்மன்கள் போய் சர்வாகாததினுல் ஒட்டி சர்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி 6-9-40ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அது விஷயமாய் உமக்கு ஏதாவது ஆக்ஷேபனே இருந்தால் ஷை தேதியில் கோர்ட்டில் ஆஜராய் தெரிவித்துக் கொள்ளலாமென்பதை இதன் மூலமாய் அறியவும்.

கும்பகோணம்
21-8-40 } எஸ். பார்த்தசாரதி.

நீங்கள் வாசிக்க

	ரூ.	அ.
தேசபக்தன் கந்தன் (சா. சி. வேங்கடரமணி)	1	0
கலையாழியின் கனவு, தியாகபூமி } (கல்கி)	2	0
சந்திரிகா (குகப்ரியை)	0	12
மங்கையர்க்கரசியின் காதல் (வ. வே. சு. ஐயர்)	0	12
சந்தனக்காவடி முதலிய கதைகள் (தி. ஜ. ர.)	0	12
கனகாம்பரம் முதலிய கதைகள் (கு. ப. ரா.)	0	12
புதுமைப் பித்தன் கதைகள்	2	0
கம்பன் கவிதை (17 ஆசிரியர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்)	1	8

ஸ்வேதாரண்ய ஆசிரம புத்தகசாலை,

295, லிங்க செட்டி தெரு, மதறஸ்.

உபயோகமான கைத்தொழில்

வேலன் அன்று சாயங்காலம் சிரித்துக்கொண்டே வந்தான். ஆனல், முத்துவைக் கண்டதும் அவன் சந்தோஷம் பன்மடங்கு அதிகமாயிற்று. அவன் நடையே ஒரு தினுசாக இருந்தது.

முத்துவும் ஒரு கணம் பிரமித்தான். வேலனைப் பார்த்தபடியே சற்று நின்ருன்.

"என்ன வேலா! கன ஜோராக இருக்கிருயே—தேன் குடித்த நரி மாதிரி அத்தனை பல்லையும் காண்பித்துக் கொண்டு! என்னடா உனக்கு இப்படி ஒய்யாரம் வந்தது?"

"ஆமாம், ஒய்யாரம்தான். தேன் குடித்த நரி என்று சொன்னுயல்லவா?

உண்மையிலே, நான் தேன் குடித்து விட்டுத்தான் வருகிறேன். அதுமட்டுமல்லாமல் தேனைக்கொண்டுபோய்ச் சந்தையில்கூட விற்றுவிட்டு வருகிறேன். இதோ பார்—10 ரூபாய், பார்த்தாயா?"

முத்து சட்டென்று அகல விழித்துப் பார்த்தான். உண்மையில், வேலன் கொஞ்ச காலமாகத் தேனீக்களைப் பிடித்து என்னென்னமோ செய்து கொண்டிருந்தானென்பது அவனுக்குத் தெரியும். ஆனல் இப்போது தேனை விற்று வேலன் 10 ரூபாய் சம்பாதித்தது அவனுக்கு ஆச்சரியமா யிருந்தது.

"முந்தியெல்லாம் தேனீக்களைப்பற்றி கேலி செய்தாயே, பார்த்தாயா இப்பொழுது?"

"ஆமாம், வேலு! இப்படி உட்கார்ந்து கொள். நீ தேனீ வளர்த்தாயே, அது எப்படி என்று சொல்லேன். நானும்..."

"ஆ! வா வழிக்கு, முதலில், தேனீ வளர்ப்பதற்கு முன் எத்தனைவிதமான தேனீக்கள் இருக்கின்றன என்று நீ தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?"

"தேனீக்களில்கூடப் பல ரகம் உண்டா?"

"ஆமாம், மலைத் தேனீ. இந்தியத் தேனீ, சிறு தேனீ, டான்னர் தேனீ என்று நாலு வகை இருக்கின்றன."

"இந்த தேனீக்களை நாம் வளர்க்கலாமல்லவா?"

"எல்லாத் தேனீக்களையும் வளர்க்கமுடியாது. இந்தியத் தேனீக்களை மட்டும்தான் நாம் செயற்கைக் கூடுகளில் வளர்க்க முடியும்."

"ஆமாம், வேலு! இப்போது தேனீக்களை எப்படிப் பிடிக்கிறது? அதைச் சொல்லேன்."

"தேனீக்கள் அடைகட்டியிருக்குமல்லவா? புதர், மரக்கிளை, மரப்பொந்து, வேலி—இவைகளில். அங்கே போய் அந்தக் கூடுகளை எடுத்துக்கொண்டு வந்து செயற்கைக் கூட்டில்கட்டிவிடவேண்டும்."

"ஐயையோ! என்னமாக தேன் கூட்டைக்கொண்டு வருகிறது? நான் தேனீ கொட்டி செத்துப்போகவேண்டு மென்று தானே..."

"இது அப்படி ஒன்றும்பிரமாதமில்லை. எல்லாம் பழக்கமிருந்தால் இலகுவாகச் செய்யலாம். முதலில் தேனீக்களைக் கூட்டைவிட்டுக் கலைத்துவிடவேண்டும். அப்படிச் செய்யும்போது, நாம் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு கைக் கவசத்துடன் ஜாக்கிரதையாகப் போகவேண்டும்.

தேனீக்களை விரட்டினபிறகு அந்தக் கூட்டைக் கொண்டுவந்து விடலாம்."

"ஆமாம். தேனீக்கள் போன பிறகு அந்தக் கூட்டை எடுத்துவைத்துக் கொள்வதால் என்ன பிரயோஜனம்?"

"ஏன்? நாம் செயற்கைக் கூடுகளில் தேன் கூட்டைக் கட்டிவிடுகிறோமல்லவா? அதற்குப் பிறகு தேனீக்களைத் தேன் கூட்டிற்குக் கொண்டு வரவேண்டும்."

"என்ன வேலு? நடக்காத காரியமாக இருக்கிறதே? எங்கேயாவது தேனீக்களைப் பிடித்துக் கூட்டிலே அடைக்க முடியுமா? அடேயப்பா, நான் மாட்டேன்!"

"கூட்டிற்குத் தேனீக்களை வரவழைப்பது மிகவும் சுலபம். முதன் முதலில் ஒரு "ராணி" ஈயைப் பிடித்துக் கூட்டிற்குள் விட்டுவிடவேண்டும். அதற்குப் பிறகு, மற்ற தேனீக்கள் நூற்றுக் கணக்கில் கூட்டுக்குக் கூப்பிடாமலே வந்து விடும்."

"நிஜமா? என்ன பாருங்களே!" ஆமாம். தேனீக்களில் 'ராணி' ஈயை, எப்படிக் கண்டு பிடிப்பது? தேனீக்களிலே ஆண், பெண் என்பது நமக்கு எப்படித் தெரியும்? கஷ்டமாக வல்லவா இருக்கிறது?"

"'ராணி' ஈயைச் சுலபமாகக் கண்டு பிடிக்கலாம். அது செங்கல் நிறமுள்ளதாகவும், வயிற்றில் கறுப்பு வரியுள்ளதாகவும் இருக்கும். வயிறு பெரிதாக இருக்கும். அந்த ஈயைப் பிடித்துக் கூட்டில் போட்டால் தேனீக்கள் வந்து விடுகின்றன."

"என்ன வேலு! இப்படி யெல்லாம் தேடிப்பிடித்துப் போடமுடியுமா? ராணி ஈ பறக்காமல் ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு இருக்கவேண்டும். நாம் அதைப் போய்ப் பிடிக்கும்போது அது நமது கையில் அகப்பட்டுக் கொள்ளவேண்டும். பிறகு கையில் கொட்டாமல் நம்மோடு சாதுவாக வந்து கூட்டிற்குள் உட்கார்ந்து கொள்ளவேண்டும். இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா?"

"அப்படி ராணி ஈயைப் பிடிக்கமுடியா விட்டால் போகிறது. நாம் கூட்டை எடுத்துக் கொண்டு வரும்போது, அந்தக் கூட்டில் நாலைந்து தேனீக்களாவது இருக்குமல்லவா? அதை வைத்துக் கொண்டே கூட்டத்தைப் பெரிதாக்கிக் கொள்ளலாம்."

"ஆமாம். அப்படிக் கொண்டு வந்த பிறகு, தேனீக்களை எப்படி வளர்ப்பது? அதைச் சொல்லவில்லையே!"

"மாடு, ஆடுகளை வளர்ப்பது போல் தேனீக்களையும் எங்கேயாவது ஓட்டிக் கொண்டுபோய் மேயவிட வேண்டியதில்லை. அப்படிச் செய்யவும் தான் முடியுமா! நல்ல புஷ்பங்கள், மரம், செடி, கொடிகள் உள்ள இடத்தில் செயற்கைக் கூட்டைப் பொருத்திவிட வேண்டும். தேனீக்கள் அவை பாட்டிற்குப் பறந்து சென்று தேன் சேர்க்கும். முக்கியமாக, பருத்தி, புளி, மா, வாழை, கொத்தமல்லி-இவைகள் உள்ள இடத்தில் கூடு இருந்தால், தேன் நிறைய அகப்படும். இந்த இடங்களில் தான் தேன் கூடுவைக்க வேண்டும்."

"ஆமாம். கொல்லைப் புறத்தில் சாக்கடைக் கருகில் கூடுவைத்தால் உருப்படு மல்லவா!"

"உனக்குத்தான் காய்கறித்தோட்டம் இருக்கிறதே, அங்கே கூடு வைத்து வளர்க்கலாம். சுத்தமான தேனாகக் கிடைக்கும். ஒரு கூடு வைத்து வளர்த்துத்தான் பாரேன், லாபம் தானாகத் தெரிகிறது."

"இருக்கட்டும், வேலு! கூட்டில் தேன் வைக்க எத்தனை நாளாகும்? அப்படித் தேன் வைத்ததும் எப்படி எப்படி எடுப்பது?"

"இதெல்லாம் பழகித்தெரிந்துகொள்ள வேண்டும். கூட்டில் தேன் இருக்கிறதா யில்லையா வென்பதைக் கூட்டைப்பார்த்தே தெரிந்து கொள்ளலாம். இன்னும், தேனீக்களை வெளியில்விடாமல் தடுப்பது, தேனீக்களை இணைத்தல் அவைகளின் பகையாளிகள், அவைகளைச் சாதுரியமாகக் கையாள்வது—எல்லாவற்றையும் பழகித்

தான் தெரிந்துகொள்ள வேண்டும். கூட்டிலிருந்து தேனை எடுப்பதற்குப் பல கருவிகள் செய்து விற்கிறார்கள். ஆனாலும் தேன் எடுக்கும் அனுபவம் வந்துவிட்டால் ஒன்றும் தேவையில்லை. கையாலேயே பிழிந்து எடுக்கலாம். நான் ஒரு தடவை செய்து காட்டுகிறேன் பார். அல்லது தேனீ வளர்க்கும் யாரைக்கேட்டாலும் நேரில் சொல்லிக்கொடுப்பார்கள். உனக்குமட்டும் இந்த உபயோகமான கைத்தொழிலில் ஊக்கம் இருக்க வேண்டும்."

"இல்லாமல் என்ன?"

"ஒரு கூட்டிற்குக் குறைந்தது 8 ராத்தல் தேனாவது இருக்கும், முத்து! ராத்தல் ரூ 1-4-0 விற்கிறது. குறைந்தது 10 ரூபாயாவது கிடைக்கும்."

"10 ரூபாயிருந்தால் ஒரு வருஷத்திற்குத் துணி மணிகள் வாங்கிவிடலாமே. சரி, நம் தென்னந்தோப்புக்குப் போனால் தேன்கூடு அகப்படுமா? சரி போய்ப் பார்க்கிறேன்."

இடைவிடாத முன்னேற்றம் ஓங்கி வரும் கீர்த்திக்கு ஓர் அறிகுறி!

நியூ ஏஷியாடிக்
லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

இதன்—6-வது வருஷத்தில் பூர்த்தி
யான இன்ஷூரன்ஸ் புள்ளி விவரம்

1939-ல் ரூ. 50 லக்ஷத்திற்கு மேல்
1938-ல் ரூ. 41·74 லக்ஷம்

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: **பிர்லா பிரதர்ஸ் லிமிடெட்**

நீங்கள் இன்ஷூர் செய்யவோ அல்லது பிரதிநிதி
களாக யிருக்கவோ ஏற்ற சிறந்த கம்பெனி இது.
விவரங்களுக்கு எழுதவும்:

மதராஸ் பிராஞ்சு:

ஏ. சுப்பையா பிராஞ்சு மானேஜர்
289, லிங்க செட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.

ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய

ப்ரச்நோத்ர ரத்ந மாலிகை

[மனனத்தின் பொருட்டுத் தமிழ்ப் பாடல்களாக
வரகவி திரு அ. சுப்ரமண்ய பாரதியார் இயற்றியது]

நூல்

(1) கோடற் குரியதெது? கோவாக் குருமொழியே;
வீடற் குரியதெது? வீண் செயலே;—நாடற்
குரியகுரு வார்? சிடன் ஓம்புநலத் தென்றும்
பிரியமுறு ஞானியெனப் பேசு

கோடல் - கொள்ளுதல்; வீடல் - தள்ளுதல்

(கருத்து) குருவின் சொல்லே கொள்ளத் தக்கது; அகாரியங்கள் தள்ளத் தக்கவை; மாணவனுடைய நன்மையில் நோக்கமுடையவன் எவனோ அவனே அடையத் தக்க ஆசாரியனாவான்.

(2) உணர்வுடையான் செய்வதென்கொல்? ஒல்லைசமு சாரப்
புணர்வறுத்தின் புண்ணப் புகுதல்—குணமருவும்
மோக்கமரத் திற்குவிதை மூதுலகில் யாது? செயல்
நீக்கமுறு ஞானமென நில்

ஒல்லை - உடனே; புணர்வு - பந்தம்; இன்பு உண்ண - நித்யாநந்தத்தை அநுபவிக்க; செயல் நீக்கம் - செயலின் நீக்கம் (கிரியை இல்லாத).

(கருத்து) புத்திசாலி உடனே ஸம்ஸார பந்தத்தை ஒழித்து ஆநந்தமடையும் நிலையைப் பெற முயல்வான். மோக்ஷ விருக்ஷத்திற்குக் கிரியையற்ற ஞானமே வித்து.

(3) சற்பத்தி யம்யாது? தன்மம்; புனிதனெவன்?
பொற்புளத்தான்; யாவன் புகழ்புலவன்?—நற்புத்தி
வாய்ந்தோன்; விடமெதுகொல்? வண்தே சிகனுரைக்
காய்ந்தே எனம்புரிதல் காண்.

சற்பத்தியம் - மேலான பத்தியம்; பொற்புளத்தன் - சித்த சுத்தி யுள்ளவன்; எளனம் - பரிகாசம்.

(கருத்து) தருமமே மேலான பத்தியம்; சித்த சுத்தி யுள்ளவனே புனிதன்; நுண்ணறிவு கொண்டவனே பண்டிதன்; ஆசாரியரைப் பழிப்பதே விஷம்.

(4) சேர்ந்தகுடும் பப்பயனென்? செஞ்சம்புண் ணுங்கவலே;
சார்ந்தமனி தப்பிறப்பிற் றத்துவத்தை—ஓர்ந்தசன்மம்
யாது? தனக்கும்பிறர்க்கும் யாண்டுஞ் சுபமுதவும்
ஏதுதனைச் செய்பிறவியே

ஓர்ந்த - அறிந்த; ஏது - உபாயம்.

(கருத்து) ஸம்ஸாரத்தால் சித்திக்கும் பயன் கவலையே; மக்களுள் தத்துவத்தை உணர்ந்த பிறவி, தனக்கும் பிறர்க்கும் நலத்தைத் தரும் உபாயத்தைச் செய்யும் பிறவியே.
(தொடரும்)

உபநயனம்

[எஸ். வைத்தீசுவர ஐயர்]

உபநயனம் என்பது குழந்தைகளுக்கு கர்ப்பாஷ்டகத்தில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரம். உப = ஸ்மீபத்தில், நயனம் = கொண்டுபோகிறது; அதாவது குருவின் ஸமீபத்தில் கொண்டுபோகிறது. அஷ்ட = எட்டு, கர்ப்பாஷ்டகம் = கர்ப்பத்தில் பிரவேசித்ததிலிருந்து எட்டாவது வருஷம். அதாவது ஏழாவது வயது. இந்த வயதில் லஜ்ஜை, விவரம், தெரிந்தும் தெரியாமலும் இருக்கும். போதிக்கப்படும் விஷயங்கள் மனத்தில் பதிந்து வேரூன்றும். ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்கள் அந்தந்தக் காலங்களில் செய்யாமல் உபநயன காலத்தில் சேர்த்துச் செய்வது தற்கால வழக்கமாயிருக்கிறது. இருந்தாலும் உபநயனமாவது காலத்தில் செய்வது அவசியம்.

பெண் குழந்தைகளுக்கு விவாஹமே உபநயனமாகும். அப்பொழுது அவள் பதியினிடம் சேர்ப்பிக்கப்படுகிறாள். பதிவ்ரதம் ஆரம்பமாகிறது. இதற்கும் கர்ப்பாஷ்டகம் போன்றகாலமே விதிக்கப்பட்டிருக்கிறது. ஜன்மம் முழுதும் அனுஷ்டிக்க வேண்டிய பாதிவ்ருத்யத்திற்கும் இளமை பயனுள்ளதாகிறது. பதியினிடம் பக்தி விச்வாஸம் வேரூன்றித் தழைப்பதற்கு ஹேதுவாகிறது.

பெண்களைப்போல ஆண்குழந்தைகள் ஜன்மம் முழுதும் அனுஷ்டிக்கவேண்டியது ப்ரம்மசர்யம். விவாஹமாகாதவன்தான் ப்ரம்மசாரி என்பதில்லை. க்ருஹஸ்தனும் விதிப்படி நடந்து கொண்டால் ப்ரம்மசாரியே. உபநயனத்திற்குப் பிறகு தண்டம், கமண்டலு, அஜினம், மேகலை தரித்துக்கொண்டும், உப்பில்லாத பிக்ஷான்னம் சாப்பிட்டுக்கொண்டும், குருகுலவாஸம் செய்து வேதமோதுவது நியமாத்யயனமாகும். ஒரு வேதம் முழுவதும் அங்கத்துடன் பூர்த்தி செய்வதற்கு 12 வருஷங்களாகும். 7லிருந்து 19 வயது வரையில், விதேச பாஷைப் படிப்பிற்கும் இவ்வளவு காலமாகிறது. வேதத்தில் ஒவ்வொரு பாகமும் பூர்த்தியானவுடன் செய்யவேண்டிய வ்ரதங்கள் நான்கு. அதன் பிறகு சமாவர்த்தனம். அதாவது குருவினிடமிருந்து திரும்பி வருவது. இந்த வேத வ்ரதங்களை இப்பொழுது விவாஹ காலத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள்.

கர்ப்பாஷ்டகத்தில் உபநயனம் செய்ய முயற்சிக்கவேண்டும். ஒரு வருஷமாவது வேறு படிப்புகளை நிறுத்தி வேதத்தை அப்யஸிக்கவேண்டும். அதாவது பாடமாகா விட்டாலும் ஒருமுறை சிரவணம் செய்து வேதங்களை முடிக்கவேண்டும். காயத்ரீ விதையைச் சரியான காலத்தில் விதைத்து எல்லாரும் ச்ரேயஸ்ஸை அடைய வேண்டுமென்று தாம் ஆசைப்படுவதாகவும், அவரவர் ச்ரத்தைக்கேற்றவாறு அதனைப் பூர்த்தி செய்யும்படியாகவும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் சொல்லி அநுக்ரஹித்தார்கள்.

* துவரங்குறிச்சியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் செய்த உபந்யாசத்தின் ஸாராம்சம்.

*சுகாதார நலன்கள்

[ராவ் பகதூர் டாக்டர் டி. எஸ் திருமூர்த்தி]

4. இன்புளுவென்சா (Influenza) ஜுரம்

இது ஒரு கடுமையான ஒட்டுவாரொட்டிஜுரம். இது சிலசமயங்களில் ஆரம்பித்துவிட்டால் நாடெங்கும் காட்டுத் தீப்போலப் பரவும். ஏககாலத்தில் ஏராளமான ஜனங்களைப் பாதிப்பதால் இதைக் கொடிய வியாதி என்றே சொல்லவேண்டும். வருஷம் முழுவதுமே எந்தக் காலத்திலும் இந்தஜுரம் வரும்; ஆனால் குளிர் காலத்தில் அதிகம். இதைத் தடுக்க நம்மால் இன்னும் முடியவில்லை. ஏனென்றால் மனிதப் போக்குவரத்தையும், அளவளாவியிருத்தலையும் நிறுத்த நம்மால் முடியவில்லை. இதற்குத் தகுந்த இஞ்செக்ஷன் மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. முன் பாதுகாப்பினாலேயே இவ்வியாதியைத் தடுக்கவேண்டும்.

5. ஜலதோஷம்

மற்றெல்லா வியாதிகளையும் விட இது பிடிப்பது மிகவும் சகஜம். இந்த வியாதியை ஜனங்கள் இன்னும் லேசாய் நினைத்து அலட்சியம் செய்கிறார்கள். இதுவும் ஒரு நுட்பமான அணுவினால் உண்டாகிறதென்றும், சளியினாலேயே அவ்வியாதி பரவுகிறதென்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜல தோஷம் ஒருவரிடமிருந்துதான் பிறருக்கு வருகிறது. அதுவும் வியாதி ஆரம்பத்தில், பிறருக்கு வருவது இன்னும் சுலபம். மனிதனே இவ்வியாதி பரவுவதற்குக் காரணம்.

ஒவ்வொருவனும் சமூகத்தின் நன்மையை உத்தேசித்து 3 நாட்களுக்குத் தன்னைத்தானே அப்புறப்படுத்திக் கொள்வானேயானால், தனக்குமட்டும் அல்ல பிறருக்கும் பெரிய நன்மையைச் செய்தவனாவான். சிலருக்கு அநேக வருஷங்களாக இந்த வியாதி அடிக்கடி வருவதுண்டு. சரீரப் பாதுகாப்பின் விஷயங்களை ஜனங்களுக்கு எடுத்துச்சொல்வதாலும், சுகாதார விதிகளுக்கு உட்பட்டு நடப்பதாலும், இவ்வியாதியை அடக்கலாம்.

6. பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகள்

பூச்சிகள் மூலம் வியாதி பரவலாமென்பதை ஜனங்கள் அறிந்திருந்தார்கள் என்றாலும், 1893ம் வருஷத்தில் டெக்ஸாஸ் நகரத்துக் கால்நடை ஜுரத்துக்கும், உண்ணிக்கும் சம்பந்தம் உண்டென்பதை "தியோபால்ட் ஸ்மித்" என்பவர் காட்டிய பிறகே, இவ்விஷயம் ஊர்ஜிதம் ஆயிற்று. பின்னர் அநேக வியாதிகள் இந்த ஜாப்தாவில் கொண்டு வரப்பட்டன. இரத்தத்தை உறிஞ்சும் எல்லாப் பூச்சிகளுமே அபாயகரமானவை என்று ஏற்பட்டன. சில பூச்சிகள் தாங்கள் பாதிக்கப்படாமலேயே மனிதனுக்கு வியாதிகளைக் கொடுக்கின்றன. இவ்வியாதிகள் வருஷம் முழுவதும் இருப்பதுடன், சில பிரதேசங்களைத் தங்களுக்கு வாசஸ் தலங்களாகக் கொண்டிருக்கின்றன. மலேரியா ஜுரத்தைத் தடுக்கும் முறையிலிருந்து, இப்பூச்சிகளின் சரித்திரத்தை நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, எத்துணை அவசியம் என்பது நமக்கு வெளியாகிறது.

பூச்சிகளின் மூலம் பரவும் வியாதிகளைத் தடுக்க, பூச்சிகள் வம்சத்தை அடியோடு அழித்தால்தான் முடியும், என்று நினைப்பது தவறு. சாத்தியமானவரை அவைகளைக் குறைத்தால் போதுமானது. உதாரணமாகக் கொசுக்கள், ஈக்கள், முதலியவற்றை அறவே ஒழிக்கவேண்டுமானால், ஏராளமான பணமும், காலமும், தேர்ந்த ஆட்களும், இன்சினியர்களும் வேண்டும்.

*திருச்சி ரேடியோவில் செய்த பிரசங்கத்தின் விரிவு.

வீடுகளிலும், வீட்டுச் சுற்றுப்புறங்களிலும் புழுக்களோ, பூச்சிகளோ சேராமல் பார்த்துக்கொள்வது சாதாரண பரிசுத்த முறைகளில் ஒன்றாகும். அவைகளுக்கு வசிக்க இடமில்லாமல் செய்ய வேண்டும். அவைகளை ஆகாராதிகளிடம் அணுக வொட்டாமல் தடுக்க வேண்டும். வீட்டின் எல்லா பாகங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம். இந்த விதிகளை அமுலுக்குக் கொண்டுவருவது முனிசிபாலிடிகளின் முக்கியமான கடமையாகும்.

(a) மலேரியாவைத்தடுக்க அநேக முறைகள் கையாளப்படுகின்றன. கை கால் முடக்கி ஜுரமும் ஒருவகைக் கோசுவால் (Dengu) பரவுவதுதான். இந்த ஜுரத்தால் பாதிக்கப்படும் ஒருவனிடமிருந்து இவ்வணுக்களை மற்றொருவனிடம் கொசுக்கள் சேர்க்கின்றன. இந்த ஜுரத்தைத் தடுக்க, கொசுக்களை ஒழிக்கவேண்டும். யானைக்கால் ஜுரத்தையும் (Filaria) பரவச்செய்வது கொசுக்களே. ஆகையால், முறைஜுரம், கை கால் முடக்கி ஜுரம், யானைக்கால் ஜுரம் இம்மூன்று ஜுரங்களையும் ஒழிக்க முதலில் கொசுக்களை விருத்தியாகாமல் தடுக்கவேண்டும்.

(b) சாதாரண வீட்டு ஈக்களினாலேயே டைபாயிட் ஜுரம் முதலிய குடல் வியாதிகள் பரவுகின்றன. நிச்சயமாய் வாந்தி பேதியையும், சீத பேதியையும் இவைகளே வியாபிக்கச் செய்கின்றன. வைசூரியும் அவ்வாறே ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் செல்கிறது. ஈக்கள் க்ஷய ரோகியின் கபத்தில் உட்கார்ந்து பின்னர் ஆகாரத்தின் மீது வந்து உட்காரலாம். ஈக்களை வியாதிக் கிருமிகளுக்கே ஒரு பெரிய இருப்பிடம் என்று சொல்லலாம். ஆகையால் ஈ வர்க்கத்தையே இல்லாமல் ஒழிப்பது நமது எல்லோருடைய பெரிய கடமையாகும். நம்மைச் சுற்றி எங்கும் அழுக்குச் சேரவிடக்கூடாது. வீட்டைச் சுற்றிக் குப்பை கூளம் கூடா. அசுத்தமே காணக் கூடாது.

(c) ப்ளேக் என்னும் கொள்ளை நோய் இந்த நோய் முதலாவது எலிக்கே உண்டாகிறது. பின்புதான் மனிதனைத் தாக்கும். ஓர் ப்ளேக் எலியினின்றும் மற்றொரு எலிக்கும், எலியினின்று மனிதனுக்கும் தெள்ளுப் பூச்சியினாலேயே இவ்வியாதி பரவுகிறது என்று இந்திய ப்ளேக் கமிஷன் நிரூபித்திருக்கிறார்கள். ஆகையால் எலிகளை ஒழிப்பது மிகவும் அவசியமான காரியம். எலிகளே எலிக் கடி ஜுரத்திற்கும் ஒருவித காமாலைக்கும் காரணம் எலிகளைப் பிடித்து நாசம் செய்ய அநேக வழிகள் இருக்கின்றன.

(d) பேன்களும், உண்ணிகளும் :— இவைகளால் அடுத்தடுத்துவரும் ஜுரம் உண்டாகிறது. மேலும், டைபஸ் என்னும் ஜுரம் உண்டாகலாம். இவைகளின் கடிகளினால் ஏற்படும் காயங்களில் இவைகளின் மலம் படுவதால் வியாதி உண்டாகிறது. இவைகளைப் போக்குவதும் அவசியமே.

சென்ற மகா யுத்தத்தில், உண்ணிகள், பேன்கள் முதலியவற்றால் உண்டான வியாதிகளை ஒழிப்பது, ஒரு பெரிய தொல்லையாயிருந்தது.

முடிவு

சில முக்கியமான வியாதிகளை அடக்கவும், அவைகளை வரவொட்டாமல் தடுக்கவும், வந்த பின் சிகிச்சை செய்யவும், வைத்திய சாஸ்திரத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை ஒருவாறு மேலே சொன்னேன். முன்னேற்றமடைந்த மேனாடுகளில் இவ்வபிவிருத்தியின் பயனால், சுகாதார இலாகா சரியான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பொது ஜன சரீர அபிவிருத்தியே இவ்விலாக்காவின் முக்கிய கொள்கை. ஜனங்களின் சௌக்கியமும், வியாதி யின்மையுமே இவர்களது முக்கிய நோக்கம். சுகாதார இலாகா தேசிய இயக்கத்தாரின் கையிலிருப்பதைவிட, வைத்திய சாஸ்திரிகளின் வசத்திலிருப்பதே நல்லது. வியாதிகளைத் தடுப்பது மட்டும் இவ்விலாகாவின் நோக்கமல்ல. பொது மக்களைத் திடகாத்திரர்களாச் செய்வதும், ஊக்கம் அதிகரிக்கச் செய்வதும் அவர்களை ஸந்தோஷம் அடையச் செய்து அவர்களை தேச ஊழியத்திற்குத் தகுதியுடையவர்

களாகச் செய்வதுமே இவர்களின் முக்கிய எண்ணம். ஒரு நாட்டின் செல்வமும், மேம்பாடும் அவ்வவ்விலாக்காவின் திறனைப் பொறுத்திருக்கிறது.

நமது ராஜதானியில் சுகாதாரச் சட்டமொன்றைச் சமீபத்தில் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதைக் கொணர்ந்த கீர்த்தி டாக்டர் ராஜனுக்கும், காங்கிரஸ் கவர்ன்மெண்டுக்கும் சேர்ந்தது. அதிலிருக்கும் நிபந்தனைகளை மீறி நடப்பவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்க, சர்க்கார் கூடிய சிக்கிரம் அனுமதி யளிப்பார்களென நம்புகிறேன்.

நம்முடைய தேசமும், மற்றைய தேசங்களுக்கு மேம்பாட்டில் பின் வாங்கியதல்ல வென்ற பேரும், நம்முடைய தேசத்திலும், 'சுகாதார உணர்ச்சி' மேன்மேலும் அதிகரித்துக் கொண்டு வருகிறது என்பதற்கு அத்தாக்ஷிகளும், சிக்கிரம் வரவேண்டும் என்று நானும் உங்களுடன் கலந்து கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

மைசூர் சந்தண சோப்

ஒரு கிரகணம்

[பெ. நா. அப்புஸ்வாமி]

சீன தேசத்தில் ஹ்ஸி, ஹோ என்று இரண்டு ஜோஸியர்கள் இருந்தார்கள். சூரிய கிரகணம், சந்திர கிரகணம் முதலிய விசேஷ சம்பவங்களைப் பற்றிக் கணக்கிட்டுத் தெரிந்துகொண்டு, முன் எச்சரிக்கை செய்யவேண்டியது அவர்களுடைய வேலைகளுள் ஒன்று. அதற்காக அவர்களுக்கு அரசாங்கச் சம்பளம் ஏற்பட்டிருந்தது. கிரகணம் பிடிக்கும் சமயங்களில் சூரியனும் சந்திரனும் பெரிய ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறார்கள் என்பது சீன தேசத்தாரின் நம்பிக்கை. அப்படித் திண்டாடும் சூரியனையும் சந்திரனையும் ஆபத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு, அம்புகளை ஆகாயத்தில் விடுவதும், பறை கொட்டுவதும் இன்னும் இவை போன்ற பலவகைக் காரியங்களைச் செய்வதும் அந்நாட்டிலே வழக்கமா யிருந்தது. இவற்றை யெல்லாம் அவர்கள் முக்கியமான சடங்குகளாகவும், இவற்றைச் செய்யாம லிருந்தால் பெருங் கேடு வந்துவிடுமென்றும் அவர்கள் நினைத்து வந்தார்கள். இப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு முன்னாலே தயாராக இருக்கவேண்டும் அல்லவா?

ஒரு சமயம் அவ்விரண்டு வான சாஸ்திரிகளும் நன்றாகக் கள்ளைக் குடித்துவிட்டு, கீழே உருண்டு கிடந்தார்கள். ஆதலால், வரப்போகிற சூரிய கிரகணத்தைப் பற்றி அவர்கள் எச்சரிக்கை செய்யத் தவறிவிட்டார்கள். ஜனங்கள் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று சூரிய கிரகணம் வந்துவிட்டது. அதிலும் சாமானியமான சூரிய கிரகணம் அல்ல; பூரண சூரிய கிரகணம். அப்போது சில நேரம் உலகமே இருளில் ஆழ்ந்துவிட்டது. கிரகண சந்தர்ப்பத்தில் நடத்தப்பட வேண்டிய சடங்குகள் ஒன்றும் சரிவர நடத்தப்படவில்லை. இப்பிசகினால் தேசத்துக்கே யாதேனும் பெரிய தீங்கு ஏற்படக்கூடும் என்று ஜனங்கள் பயந்து, அரசனிடம் போய்த் தங்களுடைய குறையைத் தெரிவித்து முறையிட்டார்கள். இது ஜோஸியர்கள் செய்த பெரும் பிழை என்று மதித்த அரசனும் அவ்விரண்டு வான சாஸ்திரிகளையும் சிரச்சேதம் செய்யும்படி உத்தரவிட்டான். அரசனுடைய கட்டளையும் முறைப்படி நிறைவேறிற்று. சூரியனுக்கு ஆபத்து வந்ததோ வரவில்லையோ தெரியாது; என்றாலும் ஜோஸியர்களுக்கு அந்தக் கிரகணத்தால் மிகப் பெரிய ஆபத்து வந்தேவிட்டது.

* * *

இந்தக் கிரகணத்தின் வரலாறும், அவ்விரண்டு ஜோஸியர்களுடைய பரிதாபகரமான மரணமும் சீனதேசத்துப் பழங்காலக் காவியமாகிய 'ஷு சிங்' என்னும் காவியத்திலே சொல்லப்படுகிறது. இந்தக் கிரகணமானது நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பு, அதாவது கி. மு. 2137-ம் வருஷத்திலே, அக்டோபர் மாதம் 22ம் தேதியன்று பிடித்திருக்க வேண்டு மென்று ஒரு கணித சாஸ்திர விற்பன்னர் கணக்கிட்டுச் சொல்லுகிறார். வேறு சிலர் இந்தக் கணக்கை ஒப்புக்கொள்ள வில்லை. அவர்கள் கணக்குக்கு வேறுவிதமான விடை கிடைத்திருக்கிறது.

கதை நிஜமானால், ஜோஸியமும் கள்ளும் சேர்ந்துவிட்டால் பிராணபத்து வந்துவிடும் என்பது தெளிவு.

(பழங்காலச்) சூரியகிரகணங்கள்

ஷூ வரலாறுகள் என்ற சீனதேசத்து நூலிலே முப்பத்தாறு சூரியகிரகணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றைக் கவனித்துப் பார்க்கும்போது அவற்றுள் நான்கு சூரிய கிரகணங்கள் அல்ல, ஹ்ஸிக்கும் ஹோவுக்கும் ஆன கதி தங்க

ளுக்கும் ஆகக் கூடாது என்று பயந்து, இல்லாதது ஒன்றிரண்டைக் கூட்டிச் சொன்னுல் அவ்வளவு கெடுதல் இல்லை, இருப்பதைச் சொல்ல விட்டுவிட்டால் தலைபோய்விடுவதாய் இருக்கிறது என்று நினைத்து, அந்த வானசாஸ்திரிகள் இல்லாத நான்கு கிரகணங்களைக் கூடுதலாகவே எழுதி வைத்திருக்கலாம். பாக்கி முப்பத்திரண்டும் நடந்த கிரகணங்கள் தாம். இவை யாவற்றுள்ளும் பழமையானது கி. மு. 776ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம் 6-ம் தேதியன்று பிடித்த சூரிய கிரகணம்.

* * *

பாபிலோனியா நாட்டுப் பழமையான சரித்திர வரலாறுகளைக் கூறும் நூல்களிலேயும் சில கிரகணங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு வர்ணிக்கப்படுகிறது: "ஏழாவது வருஷத்திலே, சிவன் மாதத்திலே, இருபத்தாறுவது நாளன்று, பகல் இரவாயிற்று. அப்போது ஆகாய வெளியிலே நெருப்புப் பிழம்பு தோன்றிற்று." இந்த வர்ணனை பூர்ணசூரியகிரகணம் ஒன்றையே குறிக்கிறது என்றும், அந்தக் கிரகணம் கி.மு. 1063-ம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதியன்று பிடித்திருக்க வேண்டும் என்றும் அறிஞர் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனுல் இந்த ஊகமும் கணக்கும் சரிதான் என்று உறுதியாய்ச் சொல்வதற்கில்லை.

* * *

அஸ்ஸிரியா நாட்டு வரலாற்று நூல்கள் யாவும் செங்கல்களிலே பொறிக்கப்பட்டுள்ளன. பழங் காலத்திலே அந்நாட்டிலே ஈரச் செங்கல்களையே காகிதமாக உபயோகித்து வந்தார்கள். அப்போப்பட்ட செங்கல்களிலே சில கிரகணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று "கோசான் கவர்னராகிய பர்கஸோல் (என்பவரின் பெயரைப் பூண்ட) வருஷத்திலே, சிவர் மாதத்திலே அஸ்ஸூரில் பெருங் குழப்பம் ஒன்று ஏற்பட்டது. அதே காலத்தில் சூரியனையும் கிரகணம் பிடித்தது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கிரகணமானது கி. மு. 763-ம் வருஷத்திலே, ஜூன் மாதம் 15-ம் தேதியன்று உண்டான சூரிய கிரகணமாகத்தான் இருக்கவேண்டும் என்று வான சாஸ்திர விற்பன்னர்கள் கணக்கிட்டுச் சொல்லுகிறார்கள்.

* * *

எகிப்து தேசத்திலுள்ள பிரமிட்டுகளைக் கட்டியவர்கள் சிறந்த வான சாஸ்திரப் பயிற்சி உடையவர்களாய் இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அந் நாட்டிலே மிகப் பழைய வான சாஸ்திரக் கருவிகள் அகப்படுகின்றன. மேலும், அந் நாட்டினர் கிரகணங்களை நன்றாகக் கவனித்திருக்கவேண்டும் என்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் கிடைத்திருக்கின்றன. அவர்களுடைய தேசத்திலே வழங்கும் சித்திர வடிவமான எழுத்திலே சூரியனைக் குறிக்கும் எழுத்தைக் கவனித்துப் பார்க்கும்போது, சூரிய கிரகணத்தை அடிக்கடி பார்த்து அனுபவித்தவர்கள் தாம் அந்த எழுத்தைக் கற்பித்து உண்டாக்கியிருக்கக்கூடும் என்று சொல்லும்படியாய் இருக்கிறது. ஆயினும், எகிப்து நாட்டிலுள்ள பழங்கால நூல்களுள் ஒன்றிலேனும் கிரகணங்களைப்பற்றிய விருத்தாந்தம் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஏனே தெரியவில்லை.

* * *

யூத நாட்டின் பழஞ் சரிதையைக் கூறும் பைபிளின் பழைய ஏற்பாட்டின் ஆகமங்களுள் ஒன்றாகிய ஆமோஸ் என்னும் ஆகமத்திலே எட்டாவது அதிகாரத்திலே ஆமோஸ் ஓர் எச்சரிக்கை செய்கிறார். "தேசத்திலே சிறுமைப்பட்டவர்களைக் கேடறச் செய்து, அவர்களை அழித்து, எளிமையுற்று வருந்தியவர்களை விழுங்கிய பாதகர்கள், இவை போதாவென்று நினைத்து, மேன்மேலும் அளவைக் குறைத்து அளப்பதற்கும், எடையை ஏமாற்றி நிறுப்பதற்கும், பதரைத் தானிய மணி என்று விற்பதற்கும், ஏழைகளையும் பரம தரித்திரர்களையும் விலைக்கு வாங்கி அடிமைகளாக்குவதற்கும் சௌகரியமான காலம் எப்போது வரும் என்று ஆவ

ஸன்லைட்

உங்கள் குடும்பத்திற்கு
சந்தோஷ மளிக்கட்டும்

புத்திசாலித்தனமுள்ள எல்லா குடும்பங்களிலும் ஸன்லைட் சோப் உபயோகித்து வருகிறார்கள். ஸன்லைட் சோப் உழைக்கும் நேரத்தை குறைத்து ஓய்வு கொடுக்கும் நேரத்தை அதிகமாக்குகிறது. ஸன்லைட் சோப் குடும்பத்தை சுத்தமாகவும் ஆரோக்யமாகவும் சந்தோஷமாயம் செய்கிறது.

உண்மையான ஸன்லைட் [illegible] பெட்டிகள் [illegible] விற்கப்பட்டு வருகிறது.

S. 19-50 TM — LEVER BROTHERS (INDIA) LIMITED

லோடு பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களைத் தெய்வம் கவனித்துக் கொண்டே வருகிறது. அவர்களுடைய வஞ்சனைகளை மறவாத தெய்வம் பழிக்குப் பழி வாங்குவேனென்று ஆணையிட்டிருக்கிறது. நிலம் அதிர்ந்து நடுநடுங்க, அதிலுள்ள மக்கள் யாவரும் பரிதவித்துப் புலம்ப, நதிகளின் வெள்ளத்தைத் தெய்வமானது பொங்கிப் பெருகச் செய்யும்; பாவிகள் மீட்சியின்றி அதனுள் ஆழ்ந்து சாவார்கள். தெய்வம் சொல்லியதைக் கேளுங்கள். 'உச்சி வேளையிலே சூரியனை அஸ்தமிக்கச் செய்வேன். பட்டப் பகல் நேரத்திலே பூமியை இருட்டாக்குவேன்', என்று தெய்வம் வாக்களித்திருக்கிறது" என்று ஆமோஸ் பாவிகளைப் பயமுறுத்துகிறார். கடைசியாகச் சொன்ன விஷயம் பூரணமான சூரிய கிரகணத்தையே குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

* * *

கிரேக்க நாட்டிலே உள்ள ஹோமர் என்னும் மகாகவி எழுதிய காவியங்களுள் ஒன்று ஒடிஸ்ஸியஸ்ஸின் சரித்திரம். ஹெலனை மீட்கச் சென்ற கிரேக்கர்களுள் ஒடிஸ்ஸியஸ் என்னும் சிற்றரசன் ஒருவன். சதியாலும் பலத்தாலும் சத்துருக்களை வென்ற கிரேக்கர்கள் தங்களுடைய தெய்வத்தை வழிபட மறந்துவிட்டார்கள். ஆதலால் அவர்கள் மீண்டும் கப்பலேறி நாட்டுக்குத் திரும்பும்போது எதிர்பாராத இடையூறுகள் அவர்களுக்கு உண்டாயின. ஒடிஸ்ஸியஸ்ஸும் அவனுடைய ஆட்களும் ஏறியிருந்த கப்பல் புயலால் எங்கெங்கெல்லாமோ அடித்துக்கொண்டு போகப்பட்டது. அதிலுள்ளவர்கள் பலவிதமான ஆபத்துகளுக்குள்ளானார்கள். கடைசியாக ஒடிஸ்ஸியஸ் மட்டிலும் வெகுகாலம் கழித்துத் தன்னுடு வந்துசேர்ந்தான். அவனை ஒருவரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவ்வளவு உருமாறிப் போய்விட்டான். ஒருவரும் எதிர்பார்க்கவும் இல்லை அவன் மனைவியைத் தவிர. தன் அரண்மனையிலே பிரபுக்களும் சிற்றரசர்களும் கூடியிருப்பதையும், அவர்கள் வீட்டிலுள்ளவர்களை மதியாமல் தம்மைத் தாமே அழைத்துக்கொண்ட விருந்தினர்களாய் தம்மிஷ்டம்போல் நடப்பதையும், தம்முள் யாராவது ஒருவனை மணந்துகொண்டாலன்றி அவ்விடம் விட்டு அகலமாட்டோம் என்று தன் மனைவியாகிய பெனிலபியை அவர்கள் துன்புறுத்துவதையும் அவன் கண்டு திகைத்துக் கோப பரவசமானுன். வேறொருவரும் தூக்கி வளைத்து நாணேற்ற முடியாத தன்னுடைய வலிமிக்க வில்லைக் கையில் ஏந்தி அவர்கள் அனைவரையும் கொன்று வீழ்த்தினன். களியாட்டின் நடுவிலே அவர்கள் அனைவரும் பரிதாபமாக மாண்டார்கள்.

அக்கொலை—இதைத் தண்டனை என்று சொல்லுவதுதான் பொருந்தும்—நடந்த தினத்தைப்பற்றிச் சொல்லும் கவி."அன்று வானவெளியிலே சூரியன் அழிந்துவிட்டது" என்று வர்ணித்துக் கொலைச் செயலுக்கும் அந்த நாளுக்கும் இருந்த கோரமான ஒற்றுமையைக் காட்டுகிறார். இதுவும் பூரண சூரியகிரகணத்தைக் குறிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவுகட்டியிருக்கிறார்கள். ஆயினும் வருஷம் மாதம் தேதி ஆகிய ஒரு விபரமும் காவியத்தில் குறிக்கப்படாதபடியால், காவியக் கதை உண்மையாயினும் உண்மையில்லாவிடினும் ஹோமர் சொல்லிய சூரிய கிரகணம் எப்பொழுது நடந்திருக்கக்கூடும் என்று ஊகிப்பதற்கில்லை.

கிரேக்க நாட்டுக் கவி வேறொருவர்—ஆர்க்கிலோக்கஸ் என்பவர்—எழுதிய நூல் ஒன்றிலே பின்வருமாறு காணப்படுகிறது. "ஒலிம்பஸ் மலைச் சிகரத்தில் வாழும் தேவர்கள் அனைவருக்கும் பிதாவாகிய ஸியுஸ் என்னும் தேவாதிதேவன், தம்முடைய சக்தியால், தகதகவென்று ஜொலிக்கும் சூரியனுடைய ஒளியை முற்றிலும் மறைத்து, நடுப்பகலை இரவாகச் செய்துவிட்டார். அப்பொழுது பூலோகத்திலுள்ள மனிதர்கள் யாவரும் மிக்க அச்சமடைந்தார்கள்." கிரேக்க காவியத்திலே காணப்படும் இந்த வர்ணனையை ஆராய்ந்த அறிவாளிகளில் சிலர் இது பூரண சூரிய கிரகணத்தையே குறிக்கிறது என்றும், இந்தக் கிரகணம் கி. மு. 648-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 6-ம்

தேதி யன்று நடைபெற்றிருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

கிரேக்க நாட்டில் வாழ்ந்தவராயும் சரித்திர நூலுக்கே பிதாவாயும் கருதப்படும் ஹெரொடட்டஸ் என்பவர் தம்முடைய வரலாற்று நூலிலே ஒரு விருத்தாந்தத்தைச் சொல்லுகிறார். இரண்டு நாட்டினருக்குள் பலவருஷ காலமாக நடந்த பெரும்போர் ஒன்றை வர்ணித்துவிட்டுப் பிறகு "ஆறுவது வருஷத்திலே சண்டை மிகவும் மும்முரமாய் நடந்து கொண்டிருக்கும்பொழுது பகல் திடீரென்று இரவாக மாறிற்று. இப்படி நிகழும் என்று முன்னமேயே தேலிஸ் தெரிந்து சொன்னார்" என்று அந்த வரலாற்று நூலிலே எழுதியிருக்கிறார். இந்த நிகழ்ச்சியும் பூரண சூரிய கிரகணத்தையே குறிக்கிறது என்று அறிவாளிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். தேலிஸ் என்பவர் மைலீட்டஸ் நகரத்திலிருந்த மிகவும் பிரக்கியாதிபெற்ற வானசாஸ்திரி. இவ்வாறு தேலிஸ் முன்னரே அறிந்து கூறிய சூரிய கிரகணம் கி. மு. 585-ம் வருஷம் மே மாதம் 28-ம் தேதியன்று பிடித்த கிரகணமாயிருக்கவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

* * *

சைரக்யூஸ் என்பது ஸிஸிலித் தீவின் தென்கிழக்கில் உள்ளது. அங்கே அகதாக்லீஸ் என்னும் கொடுங்கோல் மன்னன் ஒருவன் அரசுபுரிந்துவந்தான். அக்காலத்திலே சீர்பெற்றிருந்த கார்த்தேஜ் ராஜ்ஜியத்தின் அதிகாரத்தை எதிர்த்து அவன் போர் தொடங்கினான். ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கார்த்தேஜ் கப்பற்படை துரத்த அவனுடைய கப்பற்படை முழுவதும் பின்னிட்டு ஓட நேர்ந்தது. இராத்திரி வேளை வந்தபடியால் அன்று அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பித்துக்கொண்டார்கள். மறுநாள் காலையில் சூரியகிரகணம் பிடித்தது. பிடிக்கவே, பேராபத்திலிருந்து முந்திய நாள் கஷ்டப்பட்டுத்தப்பித்த அவனுடைய கப்பற்படையானது, தமக்குக் கேடுகாலமும் பேராபத்தும் வரப்போவதற்கு அந்தச் சூரியகிரகணமானது அறிகுறி யென்று நினைத்துக் கதிகலங்கி நடுங்கிப்போயிற்று. அந்த நிலையைக் கண்ட அகதாக்லீஸ் "ஆம். இப்பேர்ப்பட்ட கிரகணங்கள் ஏதோ பெரிய மாறுதல் உண்டாகப் போகிறது என்பதைக் குறிக்கத்தான் குறிக்கிறது. சந்தேகமில்லை. ஆதலால், மிகவும் சிறந்து மகோன்னத நிலையிலுள்ள கார்த்தேஜின் நிலைமையில் ஏதாவது மாறுதல் உண்டாகும். அல்லது, கடையினும் கடையதான, மிகவும் தாழ்ந்த, நிலையில் இருந்து சாகமாட்டாமல் தவிக்கும் நம்முடைய நிலைமையில் ஏதாவது மாறுதல் உண்டாகும். இது உறுதி. இவ்விரண்டு மாறுதல்களில் எது ஏற்பட்டாலும் நமக்கு க்ஷேமம் தானே" என்றான். அதைக் கேட்ட கப்பற்படை ஊக்கம் அடைந்தது என்பது ஒரு சரித்திரக் கதை.

* * *

நமது நாட்டு விருத்தாந்தம் ஒன்று. மகா பாரத யுத்தத்திலே, பதின்மூன்றும் நாள் நடந்த போரிலே, அருச்சுனன் மகனை அபிமன்னனைப் பல பேரரசர்கள் சூழ்ந்து, அநீதப் போர் புரிந்து கொன்றார்கள். கொன்ற கை துரியோதனனுடைய தங்கை புருஷனை ஜயத்திரதனுடைய கை. தாங்கமுடியாத புத்திர சோகத்தில் ஆழ்ந்த அருச்சுனன், "மறுநாள் சூரியன் மலைவாயில் விழுவதன்முன் என் மகனைக் கொன்ற ஜயத்திரதனைக் கொல்லுவேன்; கொல்லவில்லையானால் நெருப்பில் விழுந்து உயிர் விடுவேன்" என்று மிகக் கொடிய சபதம் செய்தான். அதைக் கேட்ட ஜயத்திரதன் நடுநடுங்கிக் குற்றுயிராய்த் தவித்தபோது, கர்ணனும் வேறு சிலரும் அவனைக் காப்பதாக வாக்குறுதி செய்தார்கள். அவனை நிலவறையில் ஒளித்துவைத்து நாற்புறமும் இருந்து அவனைக் காத்து வந்தார்கள். மறுநாள் அவனைத் தேடித் தேடிப் போர்க்களம் முழுதும் துருவிப் பார்த்து, ஆயிரக்கணக்கான பேர்களை அருச்சுனன் கொன்றபோதிலும் ஜயத்திரதனைக் கண்ணுற் காணவில்லை. மாலைவேளை வந்தது. பாண்டவர் கக்ஷியில் வருத்தமும், கௌரவக் கக்ஷியில் தைரியமும் மாலை வேளை மிகமிக மிகுந்துகொண்டே வந்தன.

திடீரென்று சூரியன் மறைந்தான். இரத்தம் பெருகிச் சிவந்த அப் போர்க் களத்தைப் போல மேற்குத் திக்கானது சிவந்துவிட்டது. கௌரவர்கள் எல்லாரும் 'சூரியன் அஸ்தமித்துவிட்டான் இனி ஜயத்திரதன் பிழைத்தான். அருச்சுனன் செத்தான்' என்று ஸந்தோஷமடைந்து ஆர்ப்பரித்தார்கள். செத்தோம் என்று நினைத்து, திகிலடைந்து செத்தவன்போல் கிடந்த ஜயத்திரதனுக்குச் செய்தியைத் தெரிவித்தார்கள். அவனை வாவென்று அழைத்து அருச்சுனன் எதிரே நிறுத்தினார்கள்.—அருச்சுனன் தீப்பாய்ந்து சாவதை அவனும் பார்க்கும் பொருட்டு.

'கொல் அவனை' என்று கிருஷ்ணன் ஏவ, அருச்சுனன் மறுத்தான். ஆனால், மறுபடியும் கிருஷ்ணன் கோபமாய் விழிக்க, அருச்சுனன் பாணம் தொடுத்து ஜயத்திரதனைக் கொன்றான்.

கௌரவர்கள் ஏசினார்கள்—அருச்சுனன் சொன்ன வார்த்தை தவறினான் என்று. அருச்சுனனும் கிருஷ்ணனும் நீதி தவறியதைக் கண்டு அவர்கள் ஆர்ப்பரித்தார்கள். (சந்தோஷ மடைந்தவர்கள்போல)—என்று வில்லி சொல்லுகிறார்.

திடீரென்று சூரியன் மறுபடியும் தோன்றிற்று. மேற்கே ஒரு பனையளவு உயரத்திலே அது தக தகவென்று ஜொலித்துக்கொண் டிருந்தது! எல்லாரும் வியப்படைந்தார்கள். 'பகலில் இரவை வரவழைத்தனன், எதிரிக்குத் தேர்ப்பாகனாக அமைந்த திருமால்" என்று கௌரவர்கள் பேசிக்கொண்டார்கள்.

இந்த விந்தையின் மர்மம் அவர்களுக்குத் தெரியவில்லை. இது மாயோன் செய்த மாயம். 'பகலில் இரவை வரவழைத்தானா? அல்லது இரவில் பகலை வரவழைத்தானா?' என்பது தான் அவர்களுடைய ஐயமெல்லாம்.

பாரதத்திலே கூறப்பட்டிருக்கும் இந்த நிகழ்ச்சியும் ஒரு பூரண சூரிய கிரகணத்தைக் குறிப்பிடுகிறதென்று பலர் கருதுகிறார்கள். இது எப்பொழுது நிகழ்ந்தது என்ற விஷயத்தைப் பற்றிக் கக்ஷிப் பிரதி கக்ஷிகள் பலமா யிருக்கின்றன. இதைக் கொண்டு மகா பாரதம் நிகழ்ந்த காலத்தை நிர்ணயிக்கக் கூடுமென்று இதை இன்னும் பலர் ஆராய்ந்து வருகிறார்கள்.



புத்தகங்கள் வரப்பெற்றோம்

ரூ.அ.

1. கோவலன்-கண்ணகி (சிலப்பதிகாரக் கதை) 0 12

(A. S. பஞ்சாபகேச ஐயர் M.A., I.C.S. ஆங்கிலத்தில் எழுதியதைத் தழுவி தி. அ. சாமிநாத ஐயர் தமிழில் எழுதியது)

2. அநுபவரஸாயனம் (ஸம்ஸ்கிருதம்-தமிழ்) 0 8

(மணிக்குடி, சாமி ஐயர் எழுதியது)

3. **The Sanatana Dharma or The Hindu view of Life**

By Sri Sankaracharya Swamigal of Sri Kanchi Kamakoti Peetam Translated from the original in Tamil-by V. R. Sundararaman, M.A.

4. **India's Road to Socialism** 1 4

By K. Santhanam

மடியில் கனமில்லை மனத்தில் பயமில்லை

[பார்வதி சுப்ரமணியம், மங்களூர்]

ஓர் அரசனிடம் வேலை செய்து வந்த உத்தியோகஸ்தர்களில் அனேகர் லஞ்சத்தில் ஆசை கொண்டவர்களா யிருந்தார்கள். அவர்கள் குடிகளிடம் வசூலிக்கும் வரிப்பணத்தைச் சரிவரப் பொக்கிஷத்தில் சேர்ப்பதில்லை. இன்னும் வெவ்வேறு விதமாகவும் குடிகளை இம்சித்துப் பொருள் பெற்று வந்தார்கள். இது அரசனுக்குத் தெரிய வந்தது. தன் அரசாங்கத்தில் இப்படிக் கேவலமாய் நடந்து கொண்டவர்களை எல்லாம் வேலையிலிருந்து நீக்கிவிட்டான்.

மற்றும் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் தலைமையாக ஒரு உண்மையான மனிதனை நியமிக்க ஏற்பாடு செய்தான். வேலைக்கு ஆசைப்பட்டு அனேகம் பேர் வந்து கூடினார்கள். அரசனுக்கு அவர்களில் யாரைப் பொறுக்கி எடுப்பது என்று தெரியவில்லை. அரண்மனை குரு அதற்கு ஒரு யுக்தி சொல்லிக் கொடுத்தார்.

அதன்படி அரசன் ஒரு நீண்ட இருட்டு அறை வழியாக அவர்களை ஒவ்வொருவராக நடந்து போய் உள்முற்றத்தில் சேரும்படி ஏற்பாடு செய்தான்.

அவர்கள் யாவரும் வந்து கூடினதும் அவர்கள் எல்லாரும் கொஞ்சம் நடனமாடிப் பார்க்கத் தனக்கு ஆசையாயிருப்பதாயும், தன் வாத்திய கோஷ்டியை உதவுவதாகவும், அந்த வாத்திய கோஷ்டிக்கு ஒத்து அவர்கள் கொஞ்சம் நடன மாடித் தன்னை ஸந்தோஷப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். இதைக் கேட்டதும் அவர்களில் ஒரு மனிதனைத் தவிர மற்றவர்கள் ஏமாற்றமும் வெட்கமும் அடைந்து நடனமாட மறுத்துவிட்டார்கள். ஒருவன் மட்டும் ஸந்தோஷமாய்ப் பாட்டுக்கு ஒத்துக் கூத்தாடினன்.

உடனே குரு அரசனைப் பார்த்து "இத்தனை மனிதர்களில் இவன் ஒருவனே யோக்யன்" என்று உத்தியோகத்துக்கு அவனைச் சிபார்சு செய்தார்.

எல்லாரும் நடந்து சென்ற இருட்டறையில் பணம் நிறைந்த பைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. நடந்து சென்ற ஒவ்வொருவரும் நாம் தனியாய்த்தானே இருக்கிறோம் என்று எண்ணி அந்தப் பைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்துத் தங்கள் மடியில் ஒளித்து வைத்திருந்தார்கள். தாங்கள் குதித்தால் அவைகள் குலுங்கும் என்று பயந்து நடனமாட மறுத்தார்கள். அவர்களில் ஒருவனே அந்தப் பணத்தைத் திருடாமல் முற்றத்தில் போய்ச் சேர்ந்தான். அவன் மடியில் கனமில்லாததால் மனத்தில் பயமில்லாமல் குதித்து நடனமாடினன்.

குழந்தையின் கதி

[பதினைந்து வயதுச் சிறுவன் கே. எஸ். ராமானுஜம் எழுதியது]

ஒரு சிறு ஊரில் பழனியாண்டார் என்னும் ஒரு பெரியலக்ஷாதிப் பிரபு இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் கமலலோசனி. அவர்களுக்குப் பாபு என்ற ஒரு ஆண்மகவும், கோதை நாயகி என்ற பெண் குழந்தையும் இருந்தனர். கமலலோசனிக்கு ராஜேந்திரன் என்ற ஒரு தம்பி இருந்தான். அவன் 'ரிஷித்திவு' என்னும் தீவில் ஒரு மிராசுதாரிடம் கணக்குப் பிள்ளை வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் திடீரென்று கமலலோசனி மாரடைப்பால் இறந்து விட்டாள். இத்துக்கம் அதிகரிக்கப் பழனியாண்டாருக்கு ஒருநாள் ஜுரம் ஆரம்பித்தது. உடனேயே அவர், தனக்குப் பிறகு தம் சொத்து தம் குழந்தைகளைச் சேர வேண்டுமென்றும், அவர்கள் பெரியவர்களாகும் வரையில் குழந்தைகளையும் சொத்தையும் ராஜேந்திரன் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மரணசாசனம் எழுதி வைத்தார். அவருக்கு நாளுக்கு நாள் ஜுரம் அதிகரித்தது. ஒரு நாள் அவரும் இரண்டு சிறு குழந்தைகளையும் பரதவிக்கவிட்டு மேலுலகிற்குச் சென்றுவிட்டார்.

பழனியாண்டார் இறந்த சமாசாரம் ரிஷித்தீவில் இருந்த ராஜேந்திரனுக்கு எப்படியோ எட்டிற்று. அவன் அங்கிருந்த வேலையை ராஜிநாமா செய்துவிட்டு, தன் அக்காள் இருந்த ஊருக்கு வந்தான். அங்கு வந்தவுடன் சிலநாள் குழந்தைகளிடம் பக்ஷமாய் இருந்தான்.

ஒரு நாள் இரண்டு குழந்தைகளும் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தபோது பந்து குளத்தில் விழுந்தது. அதை எடுக்கச் சென்ற பாபு அதில் விழுந்து உயிர் துறந்தான். ஆகையால் குழந்தை கோதை நாயகி தன்னந்தனியே இருக்கநேரிட்டது. ராஜேந்திரனுக்கு அச்சொத்துக்களின் பேரில் ஆசை வந்ததால் அக்குழந்தையையும் கொன்றால் தனக்கு அச்சொத்துசேரும் என்ற எண்ணம் வந்து விட்டது.

ஒரு குடிகாரனை ஒரு நாள் அழைத்து, "டேய், நான் உனக்கு 50 ரூபாய் தருகிறேன். நீ குழந்தை கோதை நாயகியைப் பக்கத்திலுள்ள காட்டிற்குக் கொண்டு போய்க் கொன்றுவிட்டு வந்துவிடு" என்றான். அவனும் தான் குடிப்பதற்கு நிறையபணம் கிடைத்ததென்று மகிழ்ந்து அன்று சாயுங் காலம் குழந்தைக்கு விளையாட்டு காண்பிப்பதுபோலக் காட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு தனியாக விட்டுவிட்டு ராஜேந்திரனிடம் வந்து பணத்தைப் பெற்றுக்கொண்டான்.

குழந்தை அழுதபடியே கண்ணயர்ந்து விட்டாள். மறுநாட் காலையில் குழந்தை தூக்கத்திலிருந்து எழுந்து வீட்டுக்குப் போக வழி ஒன்றும்தெரியாமல் பசியினால் அழுது கொண்டு இருந்தாள். அப்பொழுது வன தேவதை அவள்முன் தோன்றி அவளை எடுத்துக்கொண்டு போய், மேலுலகில் இருந்த அவளுடைய தாய் தந்தையரிடம் சேர்த்தனள். என்னே! குழந்தையின் கதி.